நாள்- 01.11.2023
Case No.OS.211/2010

**PW.3- – ராஜி :– பிரதிவாதிகள் 3 முதல் 5 மற்றும் 16 தரப்பில் குறுக்கு விசாரணை தொடா்ச்சி :–**

நான் ஆயிரம்மங்களம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக நிலம் இல்லை கூலி வேலைதான் செய்கிறேன். புருசோத்தம ரெட்டியார் யார் என்று எனக்கு தெரியாது. அவர் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. புருசோத்தம ரெட்டியாருக்கு நான்கு மகன்கள், நான்கு மகள்கள். அவர்களுக்கு திருமணம் ஆன பிறகு சுமார் 25 வருடங்களுக்கு மேலாக தனித்தனியாக இருக்கிறார்கள் என்றால் சரிதான். பாஸ்கர ரெட்டியார் இறந்து ஒரு வருடம் ஆகிறது. பெருமாள் கோயில் தெருவில் வாதி, பிரதிவாதிகளுக்கு பூர்வீக வீடு உள்ளது என்று என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேன். ஆனால் அந்த வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது. அந்த வீட்டில் தற்போது யார் குடியிருக்கிறார்கள் என்றால் சிவாஜி, நாராயணன் ஆகியோர் இருக்கிறார்கள். அந்த வீட்டின் பட்டா, வரி பாஸ்கர ரெட்டியார் பெயரில் உள்ளது. அந்த வரி பட்டா ஆகியவற்றை சிவாஜி என்பவர் என்னிடம் காண்பித்தார். அந்த பட்டா மற்றும் வரி ரசீதில் கதவு எண் போடப்பட்டுள்ளதா என்று நான் பார்க்கவில்லை. வழக்கில் என்ன என்ன சொத்துக்கள் கொடுத்துள்ளாகள் என்று எனக்கு தெரியாது.வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே பாகபிரிவினை எப்போது ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்தில் எந்த எந்த தேதியில் யார் யாரரிடம் வாங்கப்பட்டது மற்றும் அதன் பட்டா எண் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும் வாதிக்கு எதிராக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் எனக்கு தெரியாது.

**பிரதிவாதிகள் 2, 6 முதல் 8 மற்றும் 10 முதல் 14:–கு.வி இல்லை.**